THIRU K. VINAYAKAM : I am suggesting a method.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் கூடாது. துணைக் கேள்விகளில் அது கூடாது என்று சொன்னேன்.

திரு. எம். எஸ். மணி : இந்தச் சந்தன மரங்களை வேரோடு பிடுங்கி விட்டு அது தெரியாமல் இருப்பதற்காக நீலகிரித் தைல மரத்தை அந்த இடத்திலே கொண்டுவந்து வைத்து கணக்குக் காட்டுகிறார்களே, அதைத் தடுக்கக்கூடிய முறையிலே அவ்வப்பொழுது எவ்வளவு சந்தன மரங்கள் இருக்கின்றன என்று அதிகாரிகள் கணக்குக் கொடுக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த இடத்திலே சந்தன மரங்களுக்குப் பதிலாக நீலகிரித் தைல மரங்கள் வைத்ததாகத் தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 304 முதல் 310 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Hyacinth as cattle feed.

*** 311 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—**

(a) whether water hyacinth is used as a good feed for milch cattle ; and

(b) whether the animal nutrition section of the Madras Veterinary College processed hyacinth into a cattle feed ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆகாயத் தாமரையை கால்நடைகள் சில தீவனமாகக் கொள்வது காணப்பட்டது. கறவை மாடுகளுக்கு அது நல்ல தீவனமாகப் பயன்படுமா என்பதை ஆராய வேண்டும்.

(இ) ஆம், சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச் சத்துப் பிரிவு ஆகாயத் தாமரையின் சில மாதிரிகளை (அ) பசுந் தீவனக் குழிபதன் முறையிலும் (ஆ) உணவாகவும் பரிசோதனை மூலம் ஆராய்ந்து பார்த்தது. இப்பணி நடைபெற்று வருகிறது. இந்த ஆராய்ச்சியின் முடிவு வெளிவந்ததும், இப்பொருளைக் கால்நடைத் தீவன பொருளாகப் பயன்படுத்துவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. விநாயகம் : சார், இந்த ஹையசிந்த் என்ற ஆகாசத் தாமரை அதிகமாகக் கூவம் ஆற்றிலேயும், பக்கிங்காம் கேனாலிலும் பரவியிருக்கிறது. அதற்குக் கீழே தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்றே சந்தேகமாக இருக்கிறது. இது மாட்டுக்குத் தீவனமாக வைப்பது என்பது ஒருவிதம். இதையே நிலத்திற்கு உரமாகப் போடக்கூடும் என்ற செய்தி இருக்கிறதே, அந்தத் துறையிலே அதிகாரிகள் ஆராய்ச்சி செய்தார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, கால்நடைத் தீவனமாக அது பயன்படுகிறதா என்பது தான். அதுபற்றிப் பரிசீலனை செய்து உபயோகப்படுத்துகிறோம் என்ற தகவல் வந்திருக்கிறது. கனம் உறுப்பினருடைய மற்றொரு யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

உணவு தானியங்கள் பதுக்கல்

*** வினா 312.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1967–68-ல் பதுக்கல் தானியங்களைப் பிடிப்பதற்காக **திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டனவா ?**